1982 மார்ச் 22]

மாண்புமிகு திரு. என். இராகவானந்தம் (அ) ஆம்.

(ஆ) முழுமை திட்டத்தின்படி ஆறு புறநகர் திட்டங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளன. அவைகள் முறையே :—

(1) மணலி,

(2) மீஞ்சூர்,

(3) ஆவடி,

(4) அம்பத்தூர்,

(5) ஆலந்தூர் மற்றும்

(6) பல்லாவரம்.

தற்பொழுது மணலி புறநகர் மட்டுமே அரசு சார்ந்த முதலீட்டுடன் அமைக்கப்பட்டு வருகிறது. மற்ற ஐந்து புறநகர் திட்டப் பகுதிகளில் தனிப்பட்டவர்கள் முதலீட்டுடன் அமைக்கப்படும் வளர்ச்சிப் பணிகள் உரிய திட்ட விதிகளின்படி கட்டுப்படுத்தப் பட்டு, சீராக அமையும் வகையில் உருவாக்கப்படுகின்றன.

சென்னை நகரில் தனியார்களால் கட்டப்படும் பலமாடிக் கட்டிடங்களைத் தடை செய்யும் திட்டம்.

*வினா எண். 598—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு தொழிலாளர் நல்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் பல மாடிக் கட்டிடங்களை கட்டும் தனியார்களை தடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) சென்னை பெருநகர்க்குரிய முழுமைத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள ஊர் வளர்ச்சி உள்ளாட்சித்துறை, 1976 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 4 ஆம் நாளிட்ட அரசு ஆணை எண். 2395-ன் படியும், வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித்துறை, அரசு ஆணை எண். 1764, தேதி : 6—9—1979-ன் படியும் கீழ்க்குறிப்பிட்டுள்ள இடங்களில்தான் பல மாடிக்கட்டிடங்கள் 15 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்ட அனுமதிக்கப்பட்டது.

[1982 மார்ச் 22

எலியட்ஸ் சாலையின் வடக்கு மற்றும் கிழக்கு பக்கம், நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, மைக் நிக்கோல்ஸ் சாலை, மில்லர்ஸ் சாலை, குக்ஸ் சாலை, அம்பத்தூர்—ராயபுரம் இரயில் பாதை மற்றும் தெற்குக் கடற்கரைப் பகுதியில் மேற்குப்பக்கம். விரிவான பரிசீலனைக்குப் பிறகு, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அங்கீகாரம் பெற்று மேலும் பல இடங்களில் பல மாடிக் கட்டிடங்கள் அனுமதி அளிக்கும் வகையில் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அரசின் ஒப்புதலுக்காக செயற் குறிப்பு அனுப்பியது. இதனை நன்கு பரிசீலனை செய்து, அரசு தனது 1981 ஆம் ஆண்டு மே திங்கள் 21 ஆம் நாளிட்ட ஆணை எண். 345-ல் மேலும் 16 பகுதிகளில் பல மாடிக் கட்டிடங்கள் கட்ட அனுமதிக்க ஒப்புதல் அளித்தது. ஆனால் மேற்சொன்ன ஆணைக்கு, பொது மக்களிடமிருந்து மற்றும் பத்திரிகைகளி லிருந்தும் ஆட்சேபனைகள் எழுந்தாலும், இது சம்பந்தமாக அரசுக்கு பல்வேறு இடங்களிலிருந்து வந்த கோரிக்கைகளை பரிசீலிக்க வேண்டியுள்ளதாலும் மேற்சொன்ன ஆணைகளின் பேரில் நடவடிக்கை எடுப்பதை தடை செய்துள்ளது. இதன்படி அரசின் மறு ஆணை வரும் வரை, சென்னைப் பெருநகர் பகுதியில் பல மாடிக்கட்டிடங்கள் கட்ட அனுமதி கொடுக்கப்படமாட் டாது. இப்பொருள் பற்றி அரசு, தீவிர பரிசீலனை செய்து வருகிறது.

[முற்பகல் 9-30.]

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, அரசி னுடைய பரிசீலனையில் அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்கள். எப்போது அது முடிவு அடைந்து அறிவிக்கப்படும்? எத்தனை பேர்கள் விண்ணப்பித்து இருக்கிறார்கள்? எத்தனை அனுமதிக் கப்படாமல் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப் பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர் களே, அதைப்பற்றிய முடிவு விரைவிலே எடுக்கப்படும். அதற் காக கேபினட் சப் கமிட்டி நியமிக்கப்பட்டு, அது இரண்டு மூன்று முறைகள் உட்கார்ந்து பரிசீலனை செய்திருக்கிறது. எத்தனை வந்திருக்கிறது, எத்தனை நிராகரிக்கப்பட்டு இருக்கிறது என்ற தகவல் இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, இப் படிப் பல மாடிக் கட்டடங்கள் கட்டப்படுவதைத் தடை செய்கிற எண்ணம் அரசுக்கு எப்போது வந்தது? ஏற்கெனவே அனுமதிக் கப்பட்டதற்குக் காரணம் என்ன? இப்போது உடனடியாகத் தடை செய்வதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாலே இருந்ததைத் தொடர்ந்தோம். இடையிலே பிரச்சினைகள் எழுந்தன. சந்திக்கிறோம்.

1982 மார்ச் 22]

திரு. கோவைத் தம்பி : தலைவர் அவர்களே, இந்த பல மாடிக் கட்டடங்களை எழுப்புகிறவர்களில் வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஒரு வகையில் நம் மாநிலத்திலே முதலீடு செய்வதற்கு அது ஏதுவாக இருந்தாலும் இனியொரு வகையில் வளர்ந்து வருகின்ற மாநகராட்சி என்ற அடிப்படையில் தேவைக்கு ஏற்றபடி வசதிகளைச் செய்து கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலைமையை அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொண்டு, இதுவரையில் கட்டப்பட்டிருக்கின்ற பல மாடிக்கட்டடங்களானாலும் புதிதாகக் கட்டப்படுகின்ற பல மாடிக் கட்டடங்களானாலும் மறுபரிசீலனை செய்து அந்தக் கட்டடங்களின் மதிப்பைக் கருத்தில் கொண்டு புதிய வரிமுறையை உருவாக்கி அவைகளுக்கு அனுமதி வழங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இது ஒரு டிக்ளிஷ் பிராப்ளம். அதைப்பற்றிய அவசரமாக முடிவு எடுத்துவிட முடியாது. தீர ஆலோசனை செய்ததற்குப் பிறகுதான் எடுக்க முடியும். அதற்காக கேபினட் சப் கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. அது மிக ஆழமாக அதைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. ப. நெடுமாறன் : அவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரிலே பல மாடிக் கட்டடங்கள் கட்டுவதைத் தடுப்பதற்கு இந்த அரசு போட்ட அரசு ஆணையின் பேரில் தேனாம்பேட்டையிலே பெருந்தலைவர் காமராஜ் அவர்களுக்கு ஒரு நினைவாலயம் எழுப்புவது என்று முடிவு செய்து அந்த வேலைக்கு அவர்கள் விண்ணப்பித்தபோது அதற்கும் அரசு தடை விதித்து இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது உண்மையா ? அந்தத் தடையிலிருந்து விசேஷமான விதிவிலக்குக் கொடுத்து பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் நினைவாலயத்தை எழுப்புவதற்கு அரசு உத்திரவிடுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான பிரச்சினை. மிகவும் மரியாதையோடும் அக்கறையோடும் கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் தகுந்த பதில் சொல்கிறேன்.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான பிரச்சினை. வெளி மாநிலத்திலிருந்து பல வசதி படைத்தவர்கள் தமிழகத்தை படையெடுப்பதைப் போல் படையெடுத்து அதிகமாகப் பணம் கொடுத்து — நாம் வாங்காவிட்டாலும், நம்மால் வாங்கமுடியாது— வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். பல மாடிக் கட்டடங்களைக் கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். சென்னை நகரத்திலே நடைபெறுவது எல்லாம் வாங்கப்படுகிற வீடுகள் எல்லாம் பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களிலிருந்து

வருகின்ற முதலாளிகள்தான். ஆகவே வெளி மாநிலத்தவர்கள் இந்த மாநிலத்திலே வீடு வாங்குவதற்குத் தடை எதுவும் பிறப்பிக் கப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, வெளி மாநிலத்திலே இருக்கின்றவர்கள் வேறு மாநிலத் திலே சென்று இடங்களை வாங்கக்கூடாது என்று சட்டம் இல்லை. வாங்கலாம் என்ற உரிமை இருக்கிறது. காஷ்மீரத் திலே மட்டும்தான் அப்படிப்பட்ட நிலை இருக்கிறது. ஆகவே, இதை இந்த அரசு செய்வது இயலாததாகும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

முசிறி, பேரூர் எடையப்பட்டி ஏரி.

*வினா எண். 599—திரு. திரு. எம். கே. ராஜமாணிக்கம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி, பேரூர், எடையப்பட்டி ஏரி எப்போது தேக்கப் பட்டது ?

(ஆ) அப்போது நீர்ப்பாசன ஆயக்கட்டு நிலங்களாக எந் தப் பகுதியை சார்ந்த நிலங்கள் இருந்தன ? அல்லது நிர்ணயிக் கப்பட்டது ?

(இ) இப்போது ஆயக்கட்டுகளை மாற்றி அமைத்து முறை கேடுகள் நடந்துள்ளது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) முசிறி, பேரூர், எடையப்பட்டி ஏரி 1971 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

(ஆ) பேரூர் கிராம எல்லையில் 59 ஏக்கர் நிலங்கள் இதன் ஆயக் கட்டாக முதலில் நிர்ணயிக்கப்பட்டது.

(இ) இந்த ஏரி எடையப்பட்டி கிராம மக்களின் வேண்டு கோளின்படி அப்பகுதி நிலங்கள் பயன்பெறும் வகையில் திட்டம் அனுமதிக்கப்பட்டதாகும். இந்நிலங்கள் ஏரி அமைக்கப்படும் முன்னரே ஓடை மூலம் நேரிடை பாசனம் பெற்றவையாகும். எடையப்பட்டி மக்களின் வேண்டுகோளின்படி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பொதுப்பணித்துறையினரால் ஸ்தல பார்வையிடப்பட்டும், ஆயக்கட்டுதாரர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்தும் அவர்களது கோரிக்கைகள் நன்கு பரிசீலிக்கப்பட்டும் இந்த ஏரியின் ஆயக்கட்டு மாற்றியமைக்கப்பட்டது. ஆயக் கட்டை மாற்றி அமைத்ததில் யாதொரு முறைகேடும் நடக்க வில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS